www.kalvikural.com

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – 2014–15ம் கல்வியாண்டில் அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள கணினி பயிற்றுநர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்து நிரப்பப்படும் வரை மாணவர்கள் நலன் கருதி தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் தகுதி வாய்ந்த ஆசிரியர்களை கொண்டு நியமனம் செய்து கொள்ள அனுமதித்து வெளியிடப்பட்ட அரசாணை(1டி) எண்.268, பள்ளிக் கல்வி(ப.க2(2) துறை, நாள்–05.12.2014–ஐ இரத்து செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

**பள்ளிக்கல்வி (ப.க2(2)த் துறை**

அரசாணை ( 1டி ) எண். 275

நாள்: 15.12.2014
திருவள்ளுவராண்டு 2045
கார்த்திகை மாதம் 29 ஆம் நாள்

படிக்கப்பட்டவை:

1. சென்னை உயர்நீதிமன்ற வழக்குகளில் (Batch Cases) வழங்கப்பட்ட 18.09.2013 நாளிட்ட தீர்ப்பாணை.
2. உச்ச நீதிமன்ற வழக்கு C.A.No.3342/2014ல் வழங்கப்பட்ட தீர்ப்பாணை நாள் 07.03.2014.
3. அரசாணை(நிலை) எண்.130, பள்ளிக் கல்வி (ப.க2(2) துறை, நாள் 05.09.2014.
4. அரசாணை(1டி) எண்.268, பள்ளிக் கல்வி(ப.க2(2) துறை, நாள்–05.12.2014.
5. உச்சநீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்கள்.369, 370, 394, 488, 523 மற்றும் 524 /2014.

********

**ஆணை:–**

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில், அரசு மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள 652 கணினி பயிற்றுநர் பணியிடங்களை வேலைவாய்ப்பக பதிவு மூப்பு அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிட மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது.

2. 2014–2015ஆம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கணினிப் பாடம் பயிலும் மாணவ / மாணவிகள் நலன் கருதி வேலைவாய்ப்பு பதிவு மூப்பு அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்யப்படும் பணிநாடுநர்கள் நியமனம் செய்யப்பட்டு பணியில் சேரும் வரையில் அல்லது அதிகபட்சம் 9 மாதங்கள் வரையில், இவற்றுள் எது முந்தையதோ அந்நாள் வரையில் கணினிப் பயிற்றுநர்களை மாதம் ரூ. 4000/– தொகுப்பூதியத்தில் தற்காலிகமாக சார்ந்த பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் நியமனம் செய்து கொள்ள பள்ளி தலைமையாசிரியருக்கு அனுமதியும், அவ்வாறு நியமனம் செய்யப்படுபவர்களுக்கு ஊதியம் வழங்கும் வகையில் ஏற்படும் செலவினம் ரூ.2.35 கோடி நிதி ஒப்பளிப்பு செய்து மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வழங்கப்பட்டது.

www.kalvikural.com

3. இந்நிலையில், கணினி பயிற்றுநர்கள் மற்றும் தமிழ்நாடு கணினி அறிவியல் பி.எட்., பட்டதாரி ஆசிரியர் நலசங்கம் ஆகியவற்றால் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளில் மேற்காணும் 652 பணியிடங்களை விரைந்து நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆணையிடப்பட்டதன் அடிப்படையில், 652 கணினி பயிற்றுநர் பணியிடங்களை ரூ.4000/– தொகுப்பூதியத்தில் நிரப்பிட அனுமதித்து வெளியிடப்பட்ட அரசாணை(1டி) எண்.268, பள்ளிக் கல்வி(ப.க2(2) துறை, நாள்–05.12.2014–ஐ இரத்து செய்ய முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5/18/35/79.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாநிலக் கணக்காயர், சென்னை–35.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
நகல்
நிதி(கல்வி II/வ.செ.பொ.I மற்றும் II) துறை,
சென்னை–9.

/ஆணைப்படி / அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர். 15/12/14

ந.க.எண் 71690/ V1 /இ2/ 2014. நாள் – 15/12/14
நகல் சார்வு செய்யப்படுகிறது.

Director of School Education
Chennai-600 006

15.12.2014